## முடும்பை நம்பி
## வாழி திருநாமம்

எத்திசையும் புகழ் முடும்பைக்கு இறைவனார் வாழியே
எழுபத்து நாலில் ஒருவராய் இலங்குமவன் வாழியே
உத்தமனாம் ஆழ்வானுக்கு உகப்புடையோன் வாழியே
ஒளிர் மகிழ் மாறன் மறைக்கு உருகுமவன் வாழியே
அத்திகிரி அருளாளர் தம் அடி பணிவோன் வாழியே
அடியவர்க்கு ஆழி சங்கம் அளித்தருள்வோன் வாழியே
சுத்தமுடை தையில் அத்தம் தோன்றினான் வாழியே
தொல் புகழ் வரதாரியன் தன் துணைப் பதங்கள் வாழியே

எதிராசன் அடி பணியும் எழில் முடி மிக வாழி
இனிய செந்திருமுக மண்டலமும் வாழி
பாடியமும் தமிழ் மறையும் பகர் நாவும் வாழி
சதிரான வளைக்கழுத்தும் திருமார்பும் வாழி
சாற்றிய வெண்புரிநூலும் மாலைகளும் வாழி
கதியான முடும்பை நம்பி கழல்கள் இரண்டுமுடனே
கருணை மாநோக்கும் கரமும் ஊழி ஊழி வாழியே

---